5th August 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes. A co-operative spinning mill is at present functioning in Srivilliputhur.

(b) The licence for starting the mill was issued on 24th January 1959.

திரு. பி. முருகையன் : இந்தக் கூட்டுறவு நூற்பாலை நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறதா ? எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் ? அதன் தலைவர் யார் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

Cultivable land along Rail-track

* 112 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Southern Railways have handed over cultivable lands along the Rail track to the Government for growing more food; and

(b) if so, the conditions thereunder and the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) அடியிற்கண்ட நிபந்தனைகளை விதித்துள்ளனர்—

(1) ரயில்வே நிர்வாகத்தைச் சேர்ந்த தரிசு நிலங்கள் அனைத்தின் குத்தகைக் கால அளவு முதற்கண் மூன்றாண்டுக் கால அளவாக நிச்சயிக்கப்பட வேண்டும். குத்தகைக்காரர் அந்நிலங்களைத் தக்கவாறு பயன்படுத்தியிருந்தால், அந்நிலங்கள் அக்குத்தகைக்காரருக்கே அதே நிபந்தனைகளின் அடிப்படையில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்படலாம்.

(2) ஐந்தாண்டுக் கால அளவுக்கும் அதற்கு மேற்பட்ட கால அளவுக்கும் தொடர்ந்து விளைவிக்கப்பட்டுவரும் நிலங்கள் அனைத்தும் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட வேண்டும்; இக்குத்தகை ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

(3) நிலங்களிலிருந்து பெறப்படும் குத்தகைத் தொகையில் 95 சதவிகிதத் தொகை ரயில்வே நிர்வாகத்திற்கும் எஞ்சிய 5 சதவிகிதத் தொகை, அந்த நிலங்களை நிர்வகித்ததற்காக மாநில அரசாங்கத்திற்கும் வரவு வைக்கப்பட வேண்டும்.

(4) ரயில்வே நிர்வாகம் இந்த நிலத்தை எச்சமயத்திலும் இழப்பீடு கொடுக்காமலே மீண்டும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அப்படிச் செய்வதானால் முடிவுறாமல் நிற்கும் குத்தகைக் கால அளவுக்கான விகிதாசார குத்தகைத் தொகையை குத்தகைக்காரருக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டால் போதும்.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி எந்த அளவுக்கு நிலம் நம்முடைய அரசாங்கத்திற்கு இதன் மூலம் கிடைக்க இருக்கிறது ? இதிலே குத்தகைக்கு விடுவதற்குப் பூரண உரிமை இருக்கிறதா ?

[5th August 1966

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு நிலம் என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. முதலில் சொன்னபடி மூன்று வருஷத்திற்குக் குத்தகைக்கு விடுகிறார்கள். நன்றாக விவசாயம் செய்தால் மேலும் இரண்டு வருஷத்திற்கு விடுகிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தில் குத்தகைக்கு சாகுபடி செய்யக் கூடியவர்கள் அப்புறப்படுத்தப்படக் கூடாது என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பதால் இந்த நிலத்தைக் குத்தகைக்கு விடுகிற வரையில் அந்த சாகுபடி விவசாயிகளை வருடாவருடம் புதுப்பித்து அவர்களை அப்புறப்படுத்தாமல், அவர்கள் தவறு செய்யாத வரையில் அந்த இடத்திலேயே தொடர்ந்து அவர்களை சாகுபடிக்கு விட்டு வைக்க—ரெயில்வே நிர்வாகத்திற்கு இப்போது எடுக்க வேண்டுமென்ற அவசியமில்லை—அரசாங்கம் ஜில்லா கலெக்டர்களுக்கு உத்தரவிடுவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : முதலில் பார்க்கிறார்கள், மூன்று ஆண்டுகளுக்கு விடுகிறார்கள். அப்போது நன்றாக வேலை செய்கிறார்களா இல்லையா என்பது தெரியும். நன்றாக வேலை செய்தால் அவர்களுக்குத்தான் அநேகமாக உதவி செய்வார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஒரு ஷரத்து, வருடம் ஒன்றுக்கு ஏலத்தில் விடவேண்டுமென்று இருக்கிறது. ஏலத்தில் விட்டால் இவர்கள் போய் எடுப்பது சாத்தியமல்ல. அதிகமாகக் கொடுக்கிறேன் என்று போட்டி ஏற்பட்டால் சாகுபடி விவசாயி நிலத்தை இழக்கும் சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. லால்குடி தாலுகாவில் ரெயில்வே ஓரமாக உள்ள பகுதியை எடுத்து பின் அதிகாரிகளிடம் சொல்லித் தடுத்து வைத்து இப்படித் தகராறு ஏற்படுகிறது. மாநிலம் பூராவும் இந்தப் பிரச்னை ஏற்படுகிறது. உழவர்களின் கோரிக்கை நியாயமானது. இதைப் பரிசீலனை செய்து அரசாங்கம் ஜில்லா அதிகாரிகளுக்கு யோசனை கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் எழுந்தார்.

MR. SPEAKER : It is only a request and not a question.

நீங்கள் அப்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறார், அதைப் பரிசீலனை செய்யுங்கள், அவ்வளவுதான்.

ரெங்காராஜபுரம் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம்

* 113 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை ரெங்காராஜபுரம் வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தார் தாங்கள் விலை பேசிய நிலம் மாநில வீட்டுவசதி போர்டால் ஆர்ஜிதம் செய்யப்படுவதை ஆட்சேபித்து 1961-ல் விண்ணப்பம் செய்துகொண்டனரா ?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?